சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 291/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 5 (LW-16) | நாள் | 18.02.2026 |
| பெயர் | வெள்ளதுரை | கிராமம் | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| தாலுக்கா | செ்புணம். | வயது | 45. |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது கூடுதல் காவல் கண்காணிப்பாளராக உள்வட்ட பாதுகாப்பு பிரிவில் சென்னையில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 26.12.2018ல் மயிலாடுதுறை துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது எனக்கு முன்னர் DSP ஆக பணிபுரிந்த வெங்கடேசன் என்பவர் குத்தாலம் காவல் நிலைய குற்ற எண். 105/2018 என்ற வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக அவர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் C. No. 43/SJ&HR/2018, Dated: 19.04.2018 என்று உத்தரவிட்டுள்ளார். அந்த உத்தரவின்பேரில் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டார் அந்த வழக்கில் கொடுக்கப்பட்ட **புகார் அசாஆ 3** ஆகும். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 4** ஆகும். சம்பவ இட சாட்சிகளான சத்யராஜ், சேகர் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார். அந்த **மாதிரி வரைபடம் அசாஆ 5 ஆகும். பார்வை மகசர் அசாஆ 6** ஆகும். மேலும் கரிகாலன், ரஞ்சித், SRV நாரணயன், சுந்தர், சக்திவேல், சத்யராஜ், சேகர், சிறப்பு உதவி ஆய்வாளர் பாலாஜி, சுப்ரமணியன் காவல் ஆய்வாளர்

18/2/26

ஆகியோரை விசாரித்து விசாரணை அறிக்கை தாயர் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பினார். 24.04.2018 அன்று தாசில்தார் திருமாறன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். 21.05.2018 அன்று புகார்தாரர் கரிகாலனுக்கு சாதிசான்று வழங்கிய தாசில்தாரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த **சாதி சான்று அசாஆ 7** ஆகும். எதிரி சேகர் என்பவருக்கு சாதிசான்று வழங்கிய தாசில்தார் ராஜேஸ்வரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளார். அந்த **சாதி சான்று அசாஆ 8** ஆகும். எதிரிகளான ரமாமணி, வேல்முருகன், மதியழகன் ஆகியோருக்கு சாதி சான்றிதழ் வழங்கிய ஜெனிட்டா மேரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவர்களுக்கு வழங்கப்பட்ட **சாதிசான்றுகள் முறையே அசாஆ 9, 10, 11** ஆகும். பின்னர் அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் நான் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்டு வழக்கு கோப்பினை பார்வையிட்டபோது எதிரிகள் கைது செய்யப்படாமல் வழக்கின் தொடர்புடைய டிராக்டர் கைப்பற்றப்படாமலும் இருந்தது தெரியவந்தது. எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி டிராக்டர் சேந்திருப்பு மாரியம்மன்கோவில் அருகில் நின்றிருந்ததை சாட்சிகளான ரவிசங்கர், சங்கர் ஆகியோர் முன்னிலையில் மகசரில் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த **டிராக்டர் (புகைப்படம் மட்டும்) சாபொ 1** ஆகும். பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் ரமாமணி, சேகர், மதியழகன், வேல்முருகன் ஆகியோருக்கு நீதிமன்ற பிணை வழங்கியது தெரியவந்தது. எனவே, என் விசாரணையை முடித்து நீதிமன்றத்தில் 04.10.2019 அன்று இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கும் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரிக்கமால் எதிரிகள் மீது வாதி கொடுத்த பொய்யான புகாரைபெற்றும் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் யாரும் நான் சொன்ன விவதத்தில் சொன்னபடி விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவரத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி எம் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அவை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை